01.03.2018

# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

புதுமலர்: 15 பங்குனி - சித்திரை இதழ்: 02




சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# பொருளடக்கம்


01. அனலின் சத்தம்

02. அனலின் ஆன்மீக விருந்து

03. சிறுவர் வட்டம் - செம்மறி ஆட்டுக்குட்டியும் பன்றிக்குட்டியும்

04. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல்

05. தேவ பணியாளர் பட்டறை

06. இரட்சிப்புக்கு வழி இயேசுவே

07. பெண்கள் பக்கம்

08. வினா விடை - 86

09. நற்செய்திப்பகுதி - தேவனை ஆச்சரியப்பட வைத்த ஒரு மனிதன்

10. குறுக்கெழுத்துப்போட்டி - 84

11. அருட்பணியாளர் சரிதை - ஜான் ஹன்ட், சீகன் பால்கு

12. கதையும் கற்றதும்

13. தவறை உணர்ந்தால் மன்னியும்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.


### எழுத வேண்டிய முகவரி:

சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.





Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.



*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -



# அனலின் குரல்

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! அனலின் ஊடாக மறுபடியும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.



எரேமியா கர்த்தருடைய வார்த்தை கிடைத்த வுடன் அதை உட்கொண்டேன் என்கிறார். தேவனுடைய வார்த்தை இல்லாமல் வாழமுடியாது என்ற நிலை உள்ள மனிதனால் தேவனுக்கான வைராக்கிய வாழ்வு வாழ எந்த தடையும் வராது.

துன்பமோ, பாடுகளோ எதுவானாலும் அவருடைய வார்த்தையின்படி வாழ்வேன் என்ற நோக்கம் தேவனுடைய சித்தத்தை செய்பவர்களாக வாழச்செய்யும்.

கர்த்தருடைய சத்திய வார்த்தை மனிதனின் விடுதலைக்கான முக்கிய காரணியாகும். சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். வார்த்தையின் வடிவமாகிய கிறிஸ்துவின் வார்த்தைகள் உன்னில் பெருகப் பெருக உன் வாழ்வு அவரைப் போல மாறும்.

– ஆசிரியர் –




போதகர் வேதநாயகம் மகாராஜா




தேவனுடைய பிள்ளைகள் என சொல்லப்பட்ட மனிதர்கள் வெளியரங்கமாகவும், மறைமுகமாகவும் தேவனை முற்றுமுழுதாகவோ, பகுதியளவோ மறுதலிக்கும் சந்தர்ப்பங்கள் இப்போது பெருகியிருப்பதாகவே சொல்ல முடியும். ஏனெனில் தேவனுடனான ஜீவியத்தில் வருகின்ற துன்பங்களையும், பாடுகளையும் சகித்து ஏற்றுக்கொள்ளும் உறுதியான மனநிலையில் பல விசுவாசிகள் என சொல்லப்பட்டவர்கள் இல்லை. **சிலவேளைகளில் ஒரு துன்பத்தை சகித்துப் பொறுத்து அதை சமாளித்து வாழத்தொடங்கும் போது இன்னொருவிதமான பாடு வருகின்றது. இதில் பலர் வீழ்ந்து போகிறார்கள்.** சோதனையின் வடிவங்கள் மாறி மாறி வந்தாலும் தேவனுடைய பிள்ளை உறுதியாக நின்று அதனை மேற்கொள்ள வேண்டும்.

தேவன் யோபுவைக் குறித்து சாட்சி கொடுக்கிற போது; "*உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை*" என்று சொன்னார். அப்படிப்பட்ட பரிசுத்தவானின் வாழ்வில் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பு அவரை மிக வேதனைப்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் தேவனைக் குறித்த நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. சாத்தான் தேவனிடம் யோபுவைப் பற்றி சொல்ல முன் தேவன்; **யோபு 1:8 என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.** சிறப்பான பரிசுத்த வாழ்வு வாழ்பவர்களைக் குறித்து தேவன் சிறப்பான எண்ணம் கொண்டிருக்க முடியும். இவரின் வாழ்வு தேவன் சத்துருவோடு சவால்விடும் அளவுக்கு வந்தது. தேவனுக்குத் தெரியும் எந்த சோதனையையும் யோபு கடந்து வருவார் என்பது. சாத்தான் யோபுவை வீழ்த்துவதற்கான தன் சதிவேலையைத் தொடங்க முன் தேவனிடம் இப்படிச் சொன்னான்; **யோபு 1:10 நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர். அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று. யோபு 1:11 உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கு நேரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான்.** யோபுவை இப்படி சோதிக்க வேண்டும் என்று தேவனுக்கு விருப்பம் இல்லை. ஆனால் சத்துரு நினைத்தான் இப்படி சோதிக்கும் போது இவன் தேவனுக்கு விரோதமான செயலைச் செய்வான் என்று தேவனோடு சவால் விட்டான்.

"*நீர் அவனை ஆசீர்வதித்து, அவனை எல்லா வழிகளிலும் செழிப்பாக வைத்திருக்கிற காரணத்தினாலே அவன் உம்மை தூசிக்கமாட்டான், நீர்அவனுக்கு உண்டானவைகளைத் தொடுவீர் என்றால் என்று...*" தேவனுக்கு சொல்கிறான். "**தொடுவீர் என்றால்**" என்று சொல்லப்படுவதன் அர்த்தம் என்னவென்றால், "**அவைகள் எல்லாவற்றையும் இல்லாமல் அழிப்பீர் என்றால் அவன் உம்மை தூசிக்கிறானோ, இல்லையோ பாரும்**" என்று ஒரு சவாலைவிட்டான். இந்த சவாலுக்கு ஆண்டவர் நம்பிக்கையோடு சொன்னார்: "*சரி, நான் அவனுக்கு கொடுத்த எல்லாவற்றையும் தொட்டுப்பார். அனால் அவன் சரீரத்தில் மாத்திரம் கை வைக்காதே என்றார்.*" யோபுவை நம்பி, அவன் என் மேல் வைத்த நம்பிக்கையை, உத்தமத்தைவிடவேமாட்டான் என்று நம்பி பெரிய சவாலைவிட்டார்.

**தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்ட நாம் ஒவ்வொருவரும் எங்களைக் குறித்து ஒரு கேள்வி கேட்க வேண்டும். இதுவரைக்கும் நாம் தேவன் சார்பில் ஜெயம் எடுத்தோமா? எம்முடைய விசுவாச ஓட்டம் எப்படி அமைந்தது? தேவன் எங்கள்**

சார்பில் சத்துருவோடு சவால் விடுகிறவராக இருந்தாரா? அல்லது சத்துரு முன்பாக எங்கள் சார்பாக தலை குனிந்தாரா? என்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

## 01. சொத்துக்களையும் பிள்ளைச் செல்வங்களையும் அழிக்கும் சோதனை



**யோபு 1:13-15 (13.) பின்பு ஒரு நாள் யோபுடைய குமாரரும், அவன் குமாரத்திகளும், தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து, திராட்சரசம் குடிக்கிறபோது, 14. ஒரு ஆள் அவனிடத்தில் வந்து: எருதுகள் உழுகிற போது, கழுதைகள் அவைகளின் பக்கத்திலே மேய்ந்து கொண்டிருக்கையில், 15. சபேயர் அவைகள்மேல் விழுந்து, அவைகளைச் சாய்த்துக் கொண்டுபோனார்கள்; வேலையாட்களையும் பட்டயக்கருக்கினால் வெட்டிப் போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.** ஒருவன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது இரண்டாவதாக வந்து இன்னொருவன் சொல்கிறான்: **யோபு 1:16 இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து: வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து, ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது; நான் ஒருவன்மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.** அதன் பின் வேறொருவன் வந்து சொல்கிறான்: **யோபு 1:17 இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து: கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து, ஒட்டகங்கள்மேல் விழுந்து, அவைகளை ஓட்டிக்கொண்டுபோனார்கள்; வேலையாட்களையும் பட்டயக் கருக்கினால் வெட்டிப்போட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.** அவன் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போது நான்காவது ஆள் வந்து சொல்கிறான்: **யோபு 1:18-19 (18.) இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து: உம்முடைய குமாரரும் உம்முடைய குமாரத்திகளும்; தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்துத் திராட்சரசம் குடிக்கிறபோது, 19. வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின்மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள்; நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும் படி வந்தேன் என்றான்.** இதுவரை அவன் வைத்திருந்த எல்லாம் அழிக்கப்பட்டது என்று அவன் அறிந்த போது அவன் எப்படிப்பட்ட வேதனையை அனுபவித்திருக்க முடியும் என்று உங்களுடைய உணர்வே உங்களுக்குச் சொல்லும். **யோபு 1:20 அப்பொழுது யோபு எழுந்திருந்து.**

**தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து:**

**யோபு 1:15 எருதுகளையும், கழுதைகளையும் சாய்த்துக் கொண்டு போனார்கள்.**

**யோபு 1:15 வேலையாட்களையும் பட்டயக்கருக்கினால்வெட்டிப்போட்டார்கள்.**

**யோபு 1:16 தேவனுடைய அக்கினி விழுந்து ஆடுகளையும், வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது.**

**யோபு 1:17 கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு போனார்கள்.**

**யோபு 1:17 வேலையாட்களையும் பட்டயக்கருக்கினால் வெட்டினார்கள்.**

**யோபு 1:19 வனாந்தர வழியாய் பெருங்காற்று வந்து, வீட்டின் நான்கு மூலையிலும் அடிக்க அது பிள்ளைகள் மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள்.**

இடைவெளியில்லாத இழப்பின் செய்தி யோபுவின் காதுகளில் கேட்கப்படுகிறது. அந்நாட்களில் அவர்களின் சொத்து என சொல்லப்படுவது; ஆடு, மாடு, கழுதை, ஒட்டங்கங்கள் தான். ஒன்றும் மீதமில்லாமல் அவ்வளவற்றையும் இழந்தார் யோபு. தன் வேலைக்காரரை இழந்தார், தன் சொந்தப் பிள்ளைகளையும் இழந்தார். **இந்த சோதனையின் நேரத்தில் எந்த மனிதர்களையும் யோபு நொந்து கொள்ளவில்லை, தன் ஆடுமாடுகளை, ஒட்டகங்களை ஓட்டிச் சென்ற மனிதர்கள் மீதும் கோபப்படவில்லை.** அடுத்து **யோபு 1:16 அந்த மனிதன் ஓடிவந்து சொல்கிறான்; வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து ஆடுகளையும், வேலையாட்களையும் சுட்டெரித்துப்போட்டது என்று.** தேவனுடைய அக்கினி வந்து அழித்தது என்று ஒருவேளை தேவனை குற்றப்படுத்தியிருக்கலாம். ஆனால் யோபு இந்த முதலாவது சோதனையில் தேவனையோ எந்த மனிதர்களையோ குற்றம் சொல்லவில்லை. மாறாக யோபு என்ன செய்தார்?

**யோபு 1:20 தன் சால்வையை கிழித்து, தலையை சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து** என்று சொல்கிறது. யோபு யாரைப் பணிந்திருப்பார்? இந்தப் பெரிய துன்பம் நிறைந்த சோதனையின் மத்தியில் அவர் தேவனைப் பணிந்து கொண்டார். தாழ்மையுடன் தனக்கு ஏற்பட்ட வேதனையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அதிகமாகவே இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் அப்போஸ்தலனாகிய பவுல் **1தெசலோனிக்கேயர் 5:18** இல் சொல்கிறார்: **எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்** என்று.

**11சாமுவேல் 15:16 தாவீது ராஜா தன் மகன் அப்சலோமுக்குப் பயந்து கால்நடையாக எருசலேமைவிட்டு ஓடிப்போனார். 11சாமுவேல் 15:30-32 தாவீது தன் முகத்தை மூடிக்கொண்டு, வெறுங்காலால் நடந்து அழுது கொண்டு ஒலிவ மலையின் மேல் ஏறி மலையின் உச்சி மட்டும் வந்து தேவனைப் பணிந்து கொண்ட போது** என சொல்கின்றது. தேவனுடைய ஜனங்கள் துன்பங்கள் நடுவிலும், தேவன் ஜீவிக்கிறார் என்பதை வாழ்வில் பறைசாற்ற வேண்டும்.

**சோதனைகளின் நேரங்களிலும் கர்த்தர் ஜீவிக்கின்றார் என்பதை வாழ்வில் காண்பிப்பவன் தேவனுடைய பார்வையில் விசேஷித்தவன்.** பாடுகள் பெருகும் போது தேவனின் இருப்பைக் குறித்த கேள்வி எழவிடாமல் தடுப்பது மிகச் சிறந்தது. பாடுகள் பெருகப் பெருக தேவனுடைய பாதத்தை இறுகப்பிடிப்பது தேவன் மீது வைத்த விசுவாசத்தின் முதிர்ச்சியைக் காண்பிக்கும். தேவன் மீது குற்றம் சாட்டாதவர்களால் தேவனை சிறப்பாக பணிந்து கொள்ள முடியும்.

**இதுவரைக்கும் தேவனை நம்பியதால் என்ன நடைபெற்றது என்ற கேள்வியோடு இருக்கிறீர்களா? அல்லது நான் ஆராதிக்கிற தேவன் உண்மையுள்ளவர் என்பதை அறிக்கை செய்தீர்களா?** யோபு அந்த துன்பத்திலும் தன்னுடைய தேவனைப் பணிந்து கொண்டான். உலகத்தின் ஆசீர்வாதத்திற்குரிய சந்தோஷங்கள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குரியது. **குறிப்பிட்ட காலத்திற்குள் இருப்பவைகளுக்காக தேவனுக்குள் இருக்கும் நித்தியத்திற்குரிய உறவிலே எந்த பிரச்சினைகளையும் கொண்டுவந்துவிடக்கூடாது.** யோபு அதிலே கவனமாக இருந்து சிறப்பாக வாழ்ந்து காண்பித்தான். தேவன் யோபுவுக்கு சோதனையைக் கொடுக்கவில்லை. ஆனால் சத்துரு தான் சோதனையைக் கொடுக்க வந்தான். ஆனால் தேவன் சார்பில் யோபு ஜெயம் எடுப்பான் என்பதை அறிந்து சத்துருவோடு தேவன் சவால்விட்டார்.

**நீங்கள் தேவனுக்குரியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற போது உங்களுக்கு ஏதாவது ஒன்று நடைபெறும் என்றால் நீங்கள் தேவன் மீதோ, வேறு மனிதர்கள் மீதோ அல்லது வேறு எதன் மீதோ உங்களுடைய கோபத்தைத் தீர்க்க வேண்டாம்.** அவர்கள் தான் எங்களுக்கு தீமை செய்துவிட்டார்கள், என்று மற்றைய மனிதர்களை நொந்து கொள்ள முடியும் அல்லது இயற்கையை நொந்து கொள்ள முடியும். **எங்களுக்கு இருக்கிற ஒரே ஒரு எதிரி சத்துரு தான்.** அவன் தான் இப்படியெல்லாம் செய்வான், செய்யத்தூண்டுவான். எமக்கு வருகிற இழப்புகள், துன்பங்களைக் கண்டு நாங்கள் துவண்டு தேவனையும் மற்ற மனிதர்களையும், இயற்கையையும் நொந்திருக்கிறோம். இது ஒன்றும் இனி வேண்டாம். ஒன்று சொல்ல முடியும்; *ஆண்டவரே நீர் அனுமதித்த எல்லாவற்றிற்காகவும் உமக்கு நன்றி ஆண்டவரே என்று மட்டுமே சொல்லி அவரைப் பணிந்து கொள்ள வேண்டும்.*

இவையெல்லாம் யோபுவுக்கும் தேவனுக்கும் இருந்த உறவை உடைக்கவில்லை. **யோபு 1:21 நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.** யோபு தேவனைப் பணிந்து கொண்டு அவரைத் துதிக்கிறான். **இழப்பு, வேதனை வருகிற போது நீங்களும் நானும் செய்ய வேண்டிய சிறப்பான வேலை என்னவென்றால் தேவனைப் பணிந்து கொள்வதாகும்.** இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை தேவனைப்பற்றிக் குறை சொல்லவும் இல்லை. இந்த முதலாம் கட்ட சோதனையை யோபு மேற்கொண்டுவிட்டார். துன்பங்களின் நேரத்தில் குறை

சொல்லாமல் இருப்பதே ஒரு வெற்றி தான். சோதனை காலங்கள் பாவம் செய்வதற்கான வாய்க்கால்களாகவோ அல்லது குறை சொல்வதற்கான திறவு கோலாகவோ அமையாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

## 02. யோபுவின் சரீரத்தில் கொடிய வியாதியைக் கொடுத்துச் சோதனை



**யோபு 2:3 அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: நீ என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப் போல பூமியில் ஒருவனுமில்லை; முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார்.** தேவன் முன்பு கூறிய அதே சாட்சியை திரும்பவும் கூறுகிறார். **யோபு 2:4-5 (4.) சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான். 5. ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால்; அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான்.** இப்போது சத்துரு சொல்கிறான்: *"நீர் அவன் சரீரத்தில் கை வைக்காததினால் தான் அவன் உம்மை தூசிக்கவில்லை".* மற்றவை எல்லாம் திரும்ப பெற்றுக்கொள்ளலாம். அவ்வளவற்றையும் எடுத்துவிட்டு தந்திரமான கதை சொல்கிறான். *"நீர் அவனுடைய சரீரத்தில் வியாதியைக் கொண்டு வாரும், அவனுடைய சரீரத்தை வேதனைப்படுத்திப் பாரும், அவன் உம்மைத் தூஷிக்கிறானோ இல்லையோ பாரும்"* என்று அடுத்த சவாலை விடுகின்றான்.

**யோபு 2:6-7 (6.) அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ, அவன் உன் கையிலிருக்கிறான்; ஆகிலும் அவன் பிராணனைமாத்திரம் தப்பவிடு என்றார். 7. அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டு, யோபின் உள்ளங்கால்தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான்.** யோபு ஒரு வேளை முதலாவது வந்த துன்பத்தைத் தாங்கியிருக்கலாம். இந்த விஷப்பருக்கள் சாதாரணமான சின்னம்மை, கொப்பளிப்பான் போன்று இல்லை. இது கொடிய வேதனையை ஏற்படுத்துகிற பருக்கள். **யோபு 2:8 அவன் ஒரு ஓட்டை எடுத்து, தன்னைச் சுறண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்.**

பெரும்பாலும் மனிதர்கள் தங்கள் உடலில் மிகக் கவனமான பராமரிப்பையும்

பாதுகாப்பையும் காண்பிப்பார்கள். *நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்* என்று சொல்வார்கள். சரீரத் தோடு சம்பந்தப்படாதவைகளின் இழப்பு கொஞ்சம் சமாளிக்கக்கூடியதாக இருந்திருக் கலாம் என எண்ணத்தோன்றலாம். ஆனாலும் பெற்ற **பிள்ளைகளை இழந்த வலி சாதாரணமானதல்ல.** இப்போது உடலில் வலியை ஏற்படுத்தும் கொடிய பருக்களால் அவர் வாதிக்கப்படுகிறார். **இவ் வியாதி ஒரு தனிமையின் சூழ்நிலைக்குள் அவரைக் கொண்டு வந்திருக்கும்.** சுகத்தோடு, செல்வத்தோடு இருந்த போது அவரைக் காண வந்த பல முகங்கள் அப்படி ஒரு மனிதன் இருக்கிறாரா? என்பதைக் கூட மறந்து போயிருப்பார்கள். கொடிய பருக் களின் நிலை மற்றவர்கள் அனுக முடியாத ஒருவராக யோபுவை மாற்றியிருக்கலாம். யோபு என்ற மனிதனின் அடையாளமே மாறிப்போகப்பண்ணியிருக்கும் அந்த வியாதி. தன்னைத்தானே பராமரிக்க முடியாத நிலையை இவ் வியாதி ஏற்படுத்தி யிருக்கும்.

சரீர ஆரோக்கியம் கெடுக்கப்பட்டு வேதனைப்படும் நிலை, இனிமேல் அழிந்து போனவைகளை உழைத்துப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையையும் கெட்டுப்போகச் செய்யக்கூடிய நிலை. *போவது எல்லாம் போகட்டும், ஆரோக்கியமாக இருந்தால் சம்பாதித்துவிட்டுப் போகலாம் என நினைப்பவர்களும் உண்டு.* இங்கு ஆரோக்கியமே கெட்டுப்போய்விட்டது என்றால் எப்படி ஈடாடாமல் இருப்பது. ஆனால் **யோபு இச் சோதனையிலும் ஈடுகொடுத்துத் தாக்குப்பிடித்தார்.** ஏனெனில் உயர்வுகளும், சொத்துக்களும், பிள்ளைகளும், ஏன் ஜீவனும் தேவனா லேயே கொடுக்கப்பட்டவைகள் என்ற விசுவாசம் இன்னும் அவருக்குள் பெருகி யிருந்தது. அதனாலே தான் **"கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்"** என்ற வார்த்தையும் **"தேவன் கையில் நன்மை யைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ"** என்று தேவனை மறுதலிக்காமல், அவருடைய நடத்தும் ஆளுகைக்குள் அடங்கி ஏற்றுக் கொள்ளும் உத்தம நிலையும் உள்ளவராய் இருந்தார்.

**யோபு 2:10இல் "இவைகள் எல்லா வற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவம் செய்யவில்லை"** எனக் காணலாம். இப்படிப்பட்ட துன்பமிக்க மோசமான பாடுகளின் நிலை ஏன் எனக்கு வந்தது என்கின்ற ஏக்கம் யோபுவிடம் இருந்தது உண்மை. ஆனால் அதற்காக அவர் தேவனை தூஷிக்கவில்லை, தேவனைக் குறை சொல்லவில்லை, தேவனைக் குற்றம் கூறவில்லை. தன் உடல் சார்ந்த ஆரோக்கி யம் கெடுக்கப்பட்ட சோதனையிலும் யோபு ஜெயம் எடுத்தார்.

## 03. மனைவியே யோபுவை வெறுத்து அவரின் உள்ளத்தை உடைக்கும் சோதனை



இப்போது அவனுடைய ஆத்துமா நோகிற அளவு வேதனை. **யோபு 2:9 அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்.** சாத்தான் வியாதி என்கிற சோதனையைக் கொடுக்கும் போது தேவனிடம் கூறியது; *"நீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும் அவன் மாமிசத்தையும் தொடுவீரானால் உம்முடைய முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்"* என்று. ஆனால் அந்த வியாதியை அவன் சகித்து, தாங்கி தேவனை தன் வாயினால் தூஷிக்காமல் இருந்தான்.

இப்போது யோபுவின் எலும்பின் எலும்பும் மாமிசத்தில் மாமிசமுமானவளை சாத்தான் தொட்டு அவள் மூலமாக யோபுவை வேதனைப்படுத்துகிறான். என்னுடைய கருத்துப்படி யோபின் சொத்துக்களும், வேலைக்காரர்களும் இழக்கப்பட்ட போது அவருக்கு ஏற்பட்ட துன்பம் வேதனையைவிட பிள்ளைகள் மரித்த போது அதிக்மாக வேதனையை உணர்ந்திருப்பார். ஆனாலும் சரி எனக்கு நல்ல ஆரோக்கியம் உண்டு, நல்ல மனைவி உண்டு என நினைத்து கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கலாம். திடீரென கொடிய வியாதி இந் நிலையில் அவருடைய மனநிலை முன்பு வந்த இழப்புக்களின் வேளையில் வந்த துன்பத்தைவிட அதிகமாக துன்பப்பட்டிருப்பார்; இப்போது தன் மனைவியின் வார்த்தையைக் கேட்ட போது, வெளியான சொத்திழப்பு, பிள்ளைகளின் இழப்பு, ஆரோக்கிய இழப்பு இவை அனைத்தையும் விட அவருடைய இருதயத்தை அதிகமாக உடைக்கக்கூடிய துன்பமாக அது இருந்திருக்கும். **வெளியாகத் தாக்கப்பட்டவன் உள்ளாகவும் தாக்கப்படுகிறான்.** உணர்வு ரீதியான இழப்பு, அன்பு ரீதியான இழப்பு எனும் சோதனைக்கு முகம் கொடுக்கிறார். இறுதியாக அவர் அருகிலே இருநத ஒரே ஆறுதல் அவருடைய மனைவி.

**யோபு 1:11** இலும், **யோபு 1:25** இலும் பார்க்கும் போது யோபுவைக் கொண்டு தேவனை தூஷிக்கச் செய்ய வேண்டும் என்பது சாத்தானின் திட்டம். இப்போது அதே வார்த்தையை யோபுவின் மனைவி கூறுகிறாள். *"தேவனை தூஷித்து ஜீவனை விடும்"* இதுவரையும் தூஷிக்கும் செயலைச் செய்ய வைக்க முடியாமல் போன போது அதை அவன் மனைவியைக் கொண்டு சாத்தான் கூறுவித்திருக்க வேண்டும். சாத்தானின் திட்டத்தை நிறைவேற்ற மனைவியின் வார்த்தையில் அது வெளிப்பட்டுவருகின்றது.

**தேவனுடைய உறவை உடைக்கும்படி வருகின்ற அல்லது தேவனை தூஷிக்கச் செய்கின்ற எந்த உறவுகளின் அன்பையும் அல்லது எந்த ஆலோசனையையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.**

நெருங்கிய உறவாயிருந்தாலும் உறவுகளின் மூலம் வருகின்ற, தேவனுடனான உறவுக்கேட்டுக்கான வழிமுறைகளும் எண்ணக்கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடாதவைகள். எமக்கு நன்மை தருவது போன்ற தேவ திட்டத்துக்கு எதிரான வார்த்தைகள் தள்ளி வைக்கப்பட வேண்டியவைகள். தேவனுக்குப் பிரிய மற்ற செயலைச் செய்யப்பண்ணும் சோதனையில் ஏவாள் மூலம் ஆதாம் வீழ்ந்தான். ஆனால் யோபு தன் மனைவி மூலம் வீழ்ந்து சோதனையில் தோற்றுப் போகவில்லை.

*"தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்"* என்ற மனைவியின் கருத்துக்கு யோபுவின் பதில் *"பயித்தியக்காரி பேசுகிறது போல பேசுகிறாய்"* தேவனுடையவர்கள் பயித்தியக்காரத்தனமான பேச்சுக்களை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது சோதனையில் வெற்றி பெறுவதற்கான இன்னொரு காரணமாகும்.

**அநீதியானதை நீதியானதென ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாதே. தேவனுடைய அவருடைய வார்த்தையையும், தேவனுக்காக எப்படி வாழ வேண்டும் என்ற வாழ்க்கை முறையையும் எக்காணரம் கொண்டும் விட்டுவிடாதே.** சோதனையை மேற்கொள்ள வேண்டுமா? எத்தனையோ விதமான சோதனைகள் தாக்கிய போதும் தன் உத்தமத்தில் உறுதியாய் யோபு இருந்தார்.

தேவன் யோபுவைக் குறித்து சொன்ன சாட்சி: **யோபு 1:8 உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன்.**

ஆனால் பாடுகள் யோபுவை புரட்டி எடுத்துக் கொண்டு இருக்கும் போது மனைவி கூறியது: **யோபு 1:9 இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ?** தேவனைப் பற்றி உருக்குலையாத நம்பிக்கையோடு இனியும் நில்லாதே, தேவனை தூஷி – ஒழுக்கக்கேடாய் பேசு, சன்மார்க்க நிலையை விட்டுவிடுவதும் தேவனுக்குப் பயப்படாமல் போவதும் இதற்குள் அடங்கும்.

ஜீவனை விடும் – பொல்லாப்புக்கு விலகுபவனை, நீ உன்னைக் கொன்று பொல்லாங்கு செய் என தேவன் அவனைக் குறித்து கூறிய சாட்சிக்கு எதிராக செயற்படு என்பதே அவளுடைய கருத்து. **சோதனையில் வெற்றி பெறுவதற்கான இன்னொரு அம்சம் தேவன் உன்னைப் பற்றிக் கெண்டிருக்கும் சாட்சியை எப்போதும் காத்துக் கொள்.**

இத்தனையும் நடந்தும் யோபு பாவம் செய்யவில்லை. வேத பண்டிதர் ஒருவர் இவ்வண்ணம் கூறுகிறார்; *"தேவனின் உலக ஆளுகை முறை சரியல்ல என்று யோபுவிற்கு விளங்க வைத்து அவனைத் தேவனை*


விட்டு விலக வைப்பதேர சாத்தானின் நோக்கம். யோபுவின் செல்வத்தையும், மக்களையும், உடல் நலனையும் அழிக்க தேவ அனுமதி பெற வேண்டிய கட்டாயம் சாத்தானுக்க இருந்தது. தேவன் அனுமதிக்கும் எல்லைக்குள் நின்று தாக்கமட்டுமே சாத்தானுக்கு உரிமையுள்ளது"

ஆபத்தான உபத்திரவத்தில் மாட்டப்பட்டேன் எனக்கு ஒத்தாசையாக ஒன்றுமே இல்லை அல்லது எப்படி வெளியே வரப்போகிறேன். தேவன் உதவி செய்வதைப் போல தெரியவே இல்லை போன்று காரியம் அமைந்தாலும் சோதனையில் தோற்றுப்போகாதே. ஏனெனில் சோதனைக்குரிய அளவு தேவனிடம் உண்டு. இயேசு தோற்றுப்போகவில்லை மாறாக சோதனைக்காரன் தோற்றுப்போனான் இயேசுவிடம்.

**1கொரிந்தியர் 10:13 தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையோடு கூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.** சோதனையின் வடிவங்கள் எதுவானாலும் வீழ்ந்து விடாதிருப்பவனே தேவன் எதிர்பார்க்கும் தேவனுடைய மனிதன்.

**"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**








ஜசிந்தா அக்கா

செம்மறி ஆட்டுக்குட்டியும் பன்றிக்குட்டியும் ஒரு நாள் சந்தித்துக் கொண்டன.




ப.குட்டி:- *Hi* ஆட்டுக்குட்டி

ஆ.குட்டி:- *Hi* பன்றிக்குட்டி நான் அப்பா வீட்டிற்குப் போகிறேன். அது சரி, கழுத்தில் அழகான சிவப்புப் பட்டி கட்டியிருக்கிறாயே! யார் கட்டினது?

ப.குட்டி:- அது என்ட எஜமான் கட்டினது. இன்றைக்கு என்னை சவர்க்காரம் போட்டுக் குளிப்பாட்டி சென்ற் போட்டுவிட்டார். ஆட்டுக்குட்டி நானும் உன்னுடைய அப்பா வீட்டிற்கு வரட்டா?

ஆ.குட்டி:- இல்ல.... இல்ல வரமுடியாது

ப.குட்டி:- நான் அழகா இருக்கிறன் அல்லவா?

ஆ.குட்டி:- நீ அழகாய் இருந்தாலும், நீ பன்றி தானே. என்னுடைய அப்பாவிடம் செம்மறி ஆடுகள் தான் இருக்கிறது. பன்றிகள் இல்லை.

என்று பேசிக்கொண்டு இருவரும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். வழியில் தண்ணீர் இருக்கும் சேறான இடத்தைக் கடக்க வேண்டி இருந்தது. அதிலே இருவரும்

தவறுதலாக சறுக்கி விழுந்துவிட்டார்கள். “ஐ. . . ஐயோ.. பன்றி. . . .. பயங்கர நாற்றமடிக்குதே, தாங்கமுடியல்லயே, எனக்கு அருவருப்பாய் இருக்குதே” என்றது ஆட்டுக்குட்டி. அப்படியா? “எனக்கு நல்லா இருக்குதே ஹர் . . . ஹர் . . . ஹர் . . .” என்று பன்றி சந்தோஷமாய் சேற்றிலே தவழ்ந்தது.

**ஆனால் செம்மறி ஆட்டுக்குட்டியோ உடனடியாகவே எழுந்தது. தனது உடம்பிலிருக்கும் சேற்றை நீக்க புல்லிலே தனது உடம்பைத் தேய்த்தது. சேறு நீங்கவில்லை. உடம்பை சிலிப்பியது. மரத்தோடு தன்னை தேய்த்தது. இவ்வண்ணமாய் சேற்றை நீக்கியது. தன்னைத் துப்பரவாக்கிக் கொண்டது. அப்பா வீட்டையும் சென்றடைந்தது.**

சேற்றில் விழுந்த பன்றி சேற்றிலே உல்லாசமாய் தவழ்ந்து கொண்டிருந்தது. கழுவப்பட்ட பன்றி சேற்றுப் பன்றியானது. சென்ற் வாசனை சேற்று நாற்றமாகியது.

இயேசப்பாவின் அன்பு பிள்ளைகளே! நீங்கள்;

செம்மறி ஆட்டுக்குட்டியா?

சேற்றுப் பன்றியா?

நினைத்துப் பாருங்கள்.

**உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக - ரூத் 2:12**

---

## வினாவிடை — 85
### சரியான பதில்கள்

01. கர்த்தர் - எண்ணாகமம் 15:31

02. கர்த்தருக்குப் பயந்தவர்கள் – சங்கீதம் 119:74

03. மோசே – உபாகமம் 12:7

04. இஸ்ரவேலின் – நாகூம் 2:2

05. தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியாதவன் – 1தீமோத்தேயு 5:8

06. சகாரியாவிற்கு – லூக்கா 1:14

07. மொர்தெகாய் – எஸ்தர் 4:1

08. யோவேல் 1:12

09. பவுல் – கலாத்தியர் 1:24

10. ஆபிரகாம் - ரோமர் 4:20-21








❐ போதகர் வேதநாயகம் சுமணன்

## வாலிபர் வளாகம்



# வாலிபத்தை சீரழிக்கும் வேர்பூச்சிகள்

காட்சிகள் பார்க்கத் துடிக்கும் பருவம் இது. இயற்கையின் ரசனையில் மூழ்கவும் இன்ப உறவுகளை ஏற்படுத்தவும் துடியாய் துடிக்கும் பருவம். வளர்ச்சியைக் காட்டிலும் உணர்ச்சிக்கும், தேவையை காட்டிலும் ஆசைக்கும் அடிபணிந்துவிடும் பருவம் இது. **எவ்வழியில் நடப்பதென்று தெரியாமல் எழுந்தமானத்திற்கு முடிவுகளை எடுக்க முந்திக்கொள்ளும் கட்டிளமை பருவத்தில் வரும் கவர்ச்சி மோகத்திற்கும், காம உணர்ச்சிக்கும், போலிப்பாசத்திற்கும் இரையாகிப் போகாமல் உன் சிருஷ்டி கர்த்தரை நினைப்பாயாக.**



வாலிபத்தை சீரழித்து பின் வேடிக்கை பார்க்கும் வேர் பூச்சிகள்

## 01. நோக்கம் அற்ற பிரயாணம்

*"எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப் போல நடத்தலாமோ"* இது சிமியோன், லேவி இவ்விரண்டு பேரின்

வறட்டு ஆதங்க குரல். காரணம்: "சகோதரபாசம், கூடவே அசிங்கமான காரியத்தை நடப்பித்தவர்களைவிடமாட்டோம், அவர்களுக்கு தக்கபாடம் புகட்டினோம்" என்பதாகும். சற்றுமுன் தான் யாக்கோபு தன் சகோதரன் ஏசாவை சந்தித்துவிட்டு, இப்போ ஓர் பதிய இடத்தில் வந்து இருக்கிறான். புதிய மக்கள் கூட்டம், எல்லாமே வித்தியாசம். இவற்றின் மத்தியில் **தீனாள் (கன்னிப்பெண்)** அனேக சகோதரர்களோடு பிறந்த நேசத்திற்கும் பாசத்திற்கும் உரியவள். மனதில் எழுந்த ஒரு நோக்கமற்ற, இலக்கு இல்லாத (சும்மா ஒருக்கா எப்படி இடம், பெண்கள், நிலமை) இருக்குது பார்ப்போம் என்று போனவள் வீட்டிற்கு திரும்பி வரவேயில்லை. அவள் சீகேமின் வீட்டிலே சிறையாக்கப்பட்டுவிட்டாள்.

**உன் வாழ்விலும் நோக்கமற்ற பிரயாணம் அல்லது செயல் உன்னை சிறையாக்குவது மாத்திரம் அல்லாமல் அனேகரை சங்காரத்திற்குள்ளாக்கிவிடும்.**

(வாசிக்க வேண்டிய வேதப்பகுதி; ஆதியாகமம் 34ஆம் அதிகாரம்)

**இவ் வகையான வேர்பூச்சியை இனங்கண்டு விலகு.**

## 02. தகாத உறவுக்கு இலவச அழைப்பு

**வாழ்க்கைப்பட்ட குடும்ப பெண்கள், குடும்ப ஆண்கள் அல்லது விதவையானவர்கள், மனைவியை இழந்த தபுதாரர்கள் உன் வாலிபத்தை சீரழிக்க வேர்ப்பூச்சியாய் அரிப்பதை நீ அறியாமலே உன்னை உன் ஜீவியத்தை கறைப்படுத்திவிட வாய்ப்புண்டு.**

வாலிபனாகிய யோசேப்புடைய வாழ்வில் குறுக்கீடு செய்த எஜமானி அவன் வாழ்விலுள்ள தேவ நோக்கத்தையோ திட்டத்தையோ அறியாதவளாக, புரியாதவளாக தன்னுடைய மாம்ச இச்சைக்கு வாலிபனாகிய யோசேப்பை இரையாக்க துடியாய் துடிக்கிறாள். ஆனால் யோசேப்புக்கு தான் யார் என்றும், தன் தேவன் யார், அவர் எதை விரும்புகிறார் என்பதும் தெளிவாக தெரிந்து இருந்ததினாலே காக்கப்படுகிறான்.

உன்னை நோக்கி இலவசமாக பாவம் நீ இருக்கும் இடத்திலே இரகசியமாய் வந்தாலும், உன் இதயக் கதவைத் தட்டினாலும் அதற்கு திறந்துவிடாதே. விலகி ஓடு... ஓடு...!

(வாசிக்க வேண்டிய வேதப்பகுதி ஆதியாகம் 39ஆம் அதிகாரம்)

**இவ் வகையான வேர் பூச்சியை இனங்கண்டு விலகு.**

## 03. *(F)* பிறண்சிப் (Frindship)
## Girl Frindship / Boy Frindship

இஸ்ரவேலை இரட்சிக்க (விடுவிக்க) ஏற்படுத்தப்பட்டவன் சிம்சோன். இவன் தெலீலாள் என்னும் ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். மனோவாவும் அவன் மனைவியும் பிள்ளை இல்லாமல் இருந்த போது தேவனே இரங்கி நசரேயனாக வளர்க்க வேண்டும் என்று

சொல்லி விசேஷித்த நோக்கத்திற்காக (வேலைக்காக) தேவனாலே பிரத்தியட்சமாய் முன் அறிவிக்கப்பட்டு சவரகன் கத்தி தலையில்படாமல் வளர்க்கப்பட்ட சிம்சோன். தெலீலாளுடன் நட்பு, உறவு, சினேகம் வைத்திருந்தான். தெலீலாள் ஓர் விபச்சாரியோ, வேசியோ அல்ல. ஆனால் சத்துரு சிம்சோன் மூலம் தேவதிட்டம், தேவநாமம் மகிமைப்பட்டு நிறைவேறிவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமானவன். அதிகமான பெலன் கொண்ட தைரியசாலி தனியாக நின்றே அனேகரைக் கொன்று குவித்தவன். 300 நரிகளைப் பிடித்து வாலோடு வால் கட்டி தீப்பந்தத்தை வைத்து சத்துருவின் வேளாண்மையை சுட்டெரித்தவன்.

ஆனால் அவனை அறியாமலே எதினால் உன்னை மற்ற மனுஷரைப் போல ஆக்கலாம், சிறுமைப்படுத்தலாம், உன்னைக் கட்டலாம், மேற்கொள்ளலாம் என்று தெலீலாள் கேட்டதற்கு மூன்று முறை விளையாட்டாக உண்மைக்கு புறம்பான ஆனால் உண்மை போன்ற காரியங்களைச் சொல்கிறான். ஆனாலும் தேவ கிருபை இரக்கத்தினால் காக்கப்பட்டான். நான்காவது முறை உண்மையைச் சொல்லிவிட்டான். சவரகன் கத்தி என் தலையின்மேல்படவில்லை. நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் நசரேயனானவன். என் தலை சிரைக்கப்பட்டால் என்பலம் என்னைவிட்டுபோம். அப்போது நான்மற்ற எல்லா மனுஷரைப் போலும் ஆவேன் என்று தெலீலாளிடம் சொன்னான்.

**முடிவை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவனைப் பிடித்ததும் பெலிஸ்தர் உடனடியாக இரண்டு கண்களையும் பிடுங்கி (தோண்டி) எடுத்துவிடுகிறார்கள். எச்சரிக்கையாக இருந்து கொள் உன் சினேகத்தைக் குறித்து! வாலிபத்தை சீரழிக்கும் வேர்ப்பூச்சி இது. -**

(வாசிக்க வேண்டிய வேதப்பகுதி நியாயாதிபதிகள் 16ஆம் அதிகாரம்)

**இவ்வகையான வேர்ப்பூச்சியை இனங்கண்டு விலகு!**

## 04. ஐசுவரியத்தின் மயக்கம்

வாலிப ஜீவிய காலத்தில் நீ அறிந்து வைத்திருக்கவும், அப்பியாசிக்கவும் வேண்டியதுமான மிக முக்கியமான காரியம் இது. ஆங்கில மொழிபெயர்ப்பு NIVஇல் *"Wealth"* என்று பாவிக்கப்பட்டுள்ளது. செல்வம், பொருள்வளம் என்பவற்றை இது சுட்டி நிற்கின்றது.

மனித வாழ்விற்கு ஐசுவரியம் தேவை, அத்தியாவசியம்.

- **சுறுசுறுப்புள்ளவனின் கையோ செல்வத்தை உண்டாக்கும் - நீதிமொழிகள் 10:4**
- **கர்த்தருக்கு பயப்படுதலுக்கு வரும் பலன் ஐசுவரியம் - நீதிமொழிகள் 22:4**
- **ஐசுவரியத்தை சம்பாதிக்கிறதற்கான பெலத்தை உனக்குக் கொடுக்கிறவர் - உபாகமம் 8:18. மறந்து போகாதே.**

ஆனால் இத்தோடு வேதாகம போதனை ஐசுவரியத்தைக் குறித்து நின்றுவிடவில்லை. இதோ சில வேத சத்தியங்கள்.

✓ **கோபாக்கினை நாளில் ஐசுவரியம் உதவாது — நீதிமொழிகள் 11:4**

✓ **செல்வப்பிரியன் செல்வத்தினால் திருப்தியடைவதில்லை — பிரசங்கி 5:10**

✓ **ஐசுவரியம் அதை உடையவர்களுக்கே கேடு - பிரசங்கி 5:13**

✓ **ஐசுவரியத்தின் மயக்கம் வசனத்தை நெருக்கி — மத்தேயு 13:22**

✓ **ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம் - எரேமியா 9:23**

✓ **ஐசுவரியத்தை விரும்புகிறவர்கள் ..... பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் - 1தீமோத்தேயு 6:9**

✓ **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது — 1தீமோத்தேயு 6:10**

✓ **விசுவாசத்தை விட்டு வழுவ செய்யும் - 1தீமோத்தேயு 6:10**

✓ **தங்களை தாங்களே வேதனையால் உருவக்குத்திக்கொள்வார்கள் - 1தீமோத்தேயு 6:10**

✓ **இறுமாப்பான சிந்தைக்கு நடத்தும் - 1தீமோத்தேயு 6:17**

✓ **நிலையற்ற ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்காமல் - 1தீமோத்தேயு 6:17**

தம்பி தங்கையரே போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். ஓய்வில்லாமல் தேவனுக்கு நேரம் கொடாமல் இரவு பகலாய் உழைத்து சரீரம் சோர்ந்து, களைத்து வியாதிக்காரனாய் போய்விடாதே. பணத்தின் மேல் மோகம் கொள்ளாதே.

**இதுவும் வாலிபத்தை சீரழிக்கும் வேர்பூச்சியே.**

நினைவில் கொள்; நேர்மையான முறையில் சந்தோஷமாய் உழைத்து நீ உன் எதிர்காலத்தை மகிழ்ச்சியாக்குவதற்கும் குற்ற மனச்சாட்சியற்றும் முதிர்வயதில் ஜீவனம் பண்ணவும் இன்றே தீர்மானிப்பாயா?

*இயேசுவே எம் ஏக்கம், எழுப்புதலே எம் கதறல்.*

*ஜெபிக்கலாமா!*

*அன்பின் தகப்பனே, வேரறுக்கும் வேர்பூச்சிகளுக்கு விலகி வாழ எனக்கு உம் பெலனை தாரும். உம் வசனத்தினாலும் இரத்தத்தினாலும் தன்னை மூடி காத்துக் கொள்ளும், என்னை உம் கரத்தில் ஒப்புவிக்கிறேன். — ஆமென்.*




□ போதகர் வே.மகாராஜா

# நமது சொந்த திட்டங்களுக்கு தேவனுடைய வேலை என்கிற மூலாம் பூசுதல் ஆபத்தானது

## 02. சவுல் ராஜா மீறுதலுக்கு தேவனுடைய பலி என்னும் மூடலைப் போட்டார்

**11சாமுவேல் 15:3 இப்பொழுதும் நீ போய், அம்லேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்.** தேவன் தன்னுடைய தாசனாகிய சாமுவேலுக்கு கூறி சவுலுக்கு தெரிவிக்கும்படி அனுப்பிய வார்த்தை இது தான். ஆனால் சவுல் யுத்தத்திற்கு சென்று செய்தது என்னவென்றால்;

**1சாமுவேல் 15:9,13 (9.) சவுலும் ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழித்துப்போட மனதில்லாமல் தப்ப வைத்து, அற்பமானவைகளும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான். 13. சாமுவேல் சவுலினிடத்தில் போனான்; சவுல் அவனை நோக்கி: நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான்.** தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றாமல் நிறைவேற்றிவிட்டேன் என்று கூறினான். பிரியமானவர்களே, தேவனுடைய நாமத்திற்குரிய கனத்தை கொடுக்க தவறுகிற பட்சத்தில் பலவேளைகளில் அது யாருக்கும் தெரியாது என்று நினைக்கலாம். தேவனுக்கு நாம் எதையுமே மறைக்க

முடியாது. நாங்கள் எங்களுடைய உள்ளான வாழ்விலும், வெளியரங்கமான வாழ்விலும் தேவனுக்குரிய கனத்தை செலுத்த தவறுவது தெரியாது என்று நினைக்கிறோம், ஆனால் அது தெரியவரும். எல்லோருக்கும் தெரியாவிட்டாலும் நான் நினைக்கிறேன் சிலவேளை தேவனோடு உறவாடுகிறவர்களுக்காவது அது தெரியவரும். முக்கியமாக கர்த்தருக்கு எல்லாம் வெளிச்சமாய் இருக்கிறது.

**1சாமுவேல் 15:14-15 (14.) அதற்குச் சாமுவேல்: அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான். 15. அதற்குச் சவுல்: அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டு வந்தார்கள்; ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்; மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம் என்றான்.**

மீறுதல் எப்படி பலியாக முடியும் அல்லது தேவன் அழிக்கச் சொல்லியது எப்படி அவருக்கான பலியாகும். கீழ்ப்படியாமையின் ஆசீர்வாதம் தேவன் ஏற்றுக் கொள்ளும் பலியாக முடியுமா? மீறுதலுக்கும், கீழ்ப்படியாமைக்கும் சவுல் ராஜா கொடுத்த மாற்றுப்பெயர் "தேவனுக்கான பலி" என்பதே. தான் குற்றமற்றவன் எனக் காண்பிக்கும் ஒரு மாறுவேடம். பக்தியின் வேஷம் என்ற நிலையில் தன்னைக் காண்பித்தார் சவுல்.

தேவனுடைய ஊழியர் தான் என்ன செய்ய வேண்டும் என்பதை தெரிந்திருந்தும் அதில் தவறுதல் தெரிந்து கொண்டு தவறுதல் என்ற அட்டவணைக்குள்ளே வரும். எப்படி மறைத்தாலும் தேவன் அதன் நியத்தோற்றத்தைக் கண்டு கொனன்டேயிருப்பார். நாம் செய்யும் தவறுடன் தேவனை இணைப்பது மாதவறு. **ரோமர் 12:1 உங்கள் சரீரங்களை தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று** எனச் சொல்லப்பட்டு... **இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை** தேவனுடைய வார்த்தையின்படி வாழாத ஒருவரால் ஜீவபலியை செலுத்த முடியாது. ஜீவபலியான வாழ்வுக்குரிய "தேவனுக்குப் பிரியமான" என்ற கருத்து கவனிக்கப்பட வேண்டியதாகும். தேவனுக்கு எது பிரியம்; அவருடைய வார்த்தையின்படி வாழ்வது அவருக்குப் பிரியம். அவருடைய வசனத்தைக் கைக்கொள்பவனே பரிசுத்தமாய் வாழமுடியும். இன்று கர்த்தரின் வசனத்தைத் தள்ளி வைத்துவிட்டு போலியான ஜீவபலிகளாய் காண்பிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சவுல் கர்த்தரின் வார்த்தையை உதாசீனம் செய்துவிட்டார்.

தேவனுடைய பார்வையில் ஒரு காரியம் மீறுதல் என்றால் அதை சரியான இன்னொன்று போல மாற்றுவது தேவன் தந்த ஊழியத்தை அவமதிப்பதாகும். சரியென வெளிப்படுத்தப்பட்ட காரியத்தை நாட்கள் செல்லும் போது பிழை எனக் கண்டு கொள்வதோ அல்லது தவறானது என ஊழியர்கள் கூறிய காரியங்கள்

பின்பு சரியானதாகவோ சில வேளைகளில் இருக்கமுடியும். அவ்வாறு அமையுமிடத்து, முன்பு சரியானதை இப்போது தவறு என வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். மாறாக இன்னொரு காரணம் கூறி அதை உருமாற்றக் கூடாது. முன்னே தவறாகத் தோன்றியது இப்போது சரியானது எனக்கண்டால் அதையும் சொல்ல வேண்டும். மாறாக இன்னொரு கருத்துச் சொல்லி நாம் செய்த தவறை நியாயப்படுத்தக்கூடாது. தேவனுடைய ஊழியர்களாய் இருந்தாலும் தவறுகள் திருத்தப்பட வேண்டுமேயொழிய தவறுக்கு இன்னொரு பெயர் கொடுக்கப்படக்கூடாது. பாவம் பாவமே! ஊழியர்களால் வழிடத்தப்படுகிற வர்களுக்கு ஒன்றைச் சொல்லி நாம் அப்படி நடக்காது போனால் நாம் சபையை வஞ்சிக்கிறோம். துரோகம் செய்கிறோம். சவுல் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்தி தேவனுடைய பலியை இணைத்து ஒரு பெரிய மீறுதலைச் செய்தான். தேவன் சொன்னதை செய்யாமல், தேவனுடைய வார்த்தையை மீறி பலி செலுத்த ஆயத்தமாகிவிட்டான்.

முதலாவது எங்களை நாங்களே அவருக்கு கொடுக்க வேண்டும். எங்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை தேவனுக்கு கொடுப்பது தான் சிறப்பான பலி. அதை தவறவிட்டு பிற்பாடு போடுகிறதெல்லாம் வெறும் வேஷம் - மாய்மாலம். எனவே உண்மையான பலி செலுத்தி ஜீவபலியாக அர்ப்பணித்து ஆராதனை செய்கிற நிலைக்கு எங்களுடைய வாழ்க்கை வரவேண்டும். இல்லையென்றால் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்தி மீறுதல் செய்கிறவர்கள் என்ற அட்டவணைக்குள் வந்துவிடுவோம்.

சவுல் நலமானவைகளை, கொழுத்தவைகளைக் கண்ட போது தேவன் கூறிய முறையை அசட்சை செய்துவிட்டான். இன்றும் ஆசீர்வாதங்கள், கனம், மகிமை போன்ற சில நலங்களையும், சிறப்புக்களையம் கண்டு தேவனை அசட்டை செய்து எடுத்த தீர்மானங்களை விட்டுவிட்டு செயற்படும் நிலை காணப்படுகிறது. ஆனால் அதற்கு இன்னொரு அர்த்தமும், கருத்தும் கொடுக்கப்பட்டு போலியாக சரி செய்யப்படுகிறது.

அப்சலோம் ஆராதனை செய்யப் போகிறேன் என்று கூறி தன் சொந்த திட்டத்தைச் செய்தான். சவுல் கொல்லும்படி கர்த்தர் கூறியவைகளை அழிக்காமல் வைத்துவிட்டு தேவனுக்குப் பலி செலுத்த அவைகளை வைத்திருக்கிறேன் என்றான். தங்களின் சொந்த திட்டங்களுக்கு கர்த்தரின் நாமத்தைப் போர்வையாக மூடிக்கொண்டார்கள். தேவபணியார்களே சவுல் **ராஜாவினதும், அப்சலோமினதும் மரணம் மிக வேதனையானதாக இருந்தது. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய நாமத்தை வீணில் வழங்கினார்கள். அதற்குரிய தண்டனை ஆண்டவரிடத்தில் இருந்து வந்தது.** அது அவருடைய கட்டளை. நாம் அவருடைய நாமத்திற்கு முன்பாக நடுங்க வேண்டும். நாங்கள் தப்புவதற்காக ஆண்டவருடைய நாமத்தை பயன்படுத்தக் கூடாது.

*சிலவேளைகளில் சிலர் சில சிக்கல்களில் மாட்டினால் அதில் இருந்து தப்பிக்கொள்வதற்காக தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்வார்கள். ஏனென்றால் கிறிஸ்தவர்கள் என்றால் மற்றைய ஜனங்கள் மதிப்பு தருவார்கள் என்று.*

தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தி ஒரு பாவமான காரியத்திற்கும் நாம் உடந்தையாக இருக்கக் கூடாது. அவருடைய நாமம் பரிசுத்தமானது! பரிசுத்தமானது! பரிசுத்தமானது! ஊழியர் என்றால் ஊழியர் என்ற நிலையிலே தேவனுடைய நாமத்தை தூசிக்காமல், கனவீனப்படுத்தாமல் அவரை கனப்படுத்தி வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் அவரிடம் இருந்து வருகிற பெரிய தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.


முற்றும்.

## படித்ததில் பிடித்தது




*விக்டோரியா ராணியை நோக்கி: "ஆங்கிலேய சம்ராஜியத்தின் மகிமைக்கு காரணம் என்ன?; என்று ஒருவர் கேட்ட போது விக்டோரியா ராணி அவனிடம் ஒரு பரிசுத்த வேதாகமத்தை காண்பித்து, அதை அவனுக்கு கொடுத்து "இந்த பரிசுத்த வேதாகமமே" என்றார்.*

ஒருவன் தேவனுடைய
போதனைகளைக் கேட்க மறுத்தால்;
தேவன் அவனது ஜெபங்களையும்
கேட்க மறுத்துவிடுவார்.



**சரியான விடை எழுதியவர்களில்**
**பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**



**வினாவிடை - 85**
எஸ். சிந்துஜா
மானிப்பாய்

**குறுக்கெழுத்துப் போட்டி - 83**
எம். ஜெயந்தி - மானிப்பாய்




❑ ரேமா

பறித்து, புசித்து, கொடுத்து தேவ கட்டளையை மீறிய ஆதிப்பெற்றோரின் கீழ்ப்படியாமை முழு மனுக்குலத்தையும் பாவத்திற்குள் தள்ளிப்போட்டது. இரக்கமாய் தேவன் *"ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?"* என்று கூவி அழைத்தாலும் கூட; ஆரம்பத்தில் கொண்டிருந்த ஐக்கியமும், உரையாடலும் விரிசலடைந்ததாகவே போய்விட்டது.

சுயசித்தமுள்ள மனிதன் தனது தெரிவினாலே தேவனை வாழ்விலிருந்து வெளியேற்றிவிட்டான். இன்றும் கூட ஒவ்வொரு மனித வாழ்விலும் இப்படியே தான். சுயாதீனமுள்ள மனிதன் சத்தியத்திற்கு கீழ்ப்படியவும், கீழ்ப்படியாமல் போகவும் அவனுக்கு முழு உரிமை உண்டு.

**சத்தியத்தை அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.**

**என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தினாலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். — ரோமர் 10:9-10**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். — நீதிமொழிகள் 28:13**

**1யோவான் 1:8-9 (8.) நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. 9. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**




❑ திருமதி. J.பிலிப்




பகலின் உஷ்ண வேளையில் கூடார வாசலில் ஒரு தம்பதியினர் உட்கார்ந்திருந்தார்கள். அங்கே மூன்று மனிதர்கள் தங்களுடைய கூடார வாசலில் நிற்பதைக் கண்ட கணவன் ஓடி அவர்களை அன்போடு அழைத்து தங்களுடைய வீட்டில் சற்று நேரம் தங்கி போஜனம் பண்ணி செல்லும்படி அழைத்தான். வந்தவர்களும் அதற்கு உடன்பட்டார்கள்.

**யார் இந்த தம்பதிகள்? இவர்கள் தான் திரு. திருமதி. ஆபிரகாம்.** வந்தவர்களை மரத்தடியில் சாய்ந்து இருக்கும்படி கேட்டு, அவர்களுக்கு தண்ணீர் கொடுத்த பின் கணவன் தீவிரமாய் கூடாரத்திற்குள் சென்று மனைவியிடம் சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து அப்பம் சுடும்படி கூறி, பின் மாட்டு மந்தைக்குள் ஓடி ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து வேலைக்காரன் கையில் கொடுத்தான். அவன் அதைச் சீக்கிரமாய் சமைத்தான். சமைத்ததை மரத்தடியில் இருந்தவர்களுக்கு ஆபிரகாம் கொடுத்தான். அவர்களும் அதனை புசித்தார்கள். **ஆதியாகமம் 18:6-7**

பின்பு வந்தவர்கள் ஆபிரகாமை நோக்கி; **உன் மனைவி சாராள் எங்கே?** என்றார்கள். அதோ கூடாரத்திற்குள் இருக்கிறாள் என்றான். **ஆபிரகாம் சாராளை முன்பாக அழைக்கவும் இல்லை,** மாறாக **சாராள் முன்பாக ஓடி வந்து நான் தான் உங்களுக்காக அப்பம் சுட்டவள் என்றும் தன்னை அறிமுகப்படுத்தி காண்பிக்கவும் இல்லை. சாராள் அவளுக்குப் பின்புறமாய் கூடார வாசலில் இதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.**

எதை சாராள் கேட்டுக் கொண்டிருந்தாள்? **ஆதியாகமம் 18:10 அப்பொழுது அவர்: ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொ**

**ழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள் அவருக்குப் பின்புறமாய்க் கூடாரவாசலில் இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.** பின்புறமாய் நின்றவளின் வாழ்க்கையிலே நடந்த அற்புதம் தான் என்ன?

ஆதியாகமம் 20:2-3 (2.) **அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான். 3. தேவன் இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி: நீ அழைப்பித்த ஸ்திரீயினிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே என்றார்.** அபிமெலேக்கு ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை அவனிடத்தில் ஒப்புவித்தான். **சாராள் மேல் யாரும் கைபோட தேவன் அனுமதிக்கவில்லை.** அதுமட்டுமல்ல, ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்தார். **சாராள் ஒரு தீர்க்கதரிசியின் மனைவி. ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டுதல் செய்ததின் நிமித்தம் அபிமெலேக்குடைய வீட்டார் குணப்பட்டார்கள்.**

சகோதரிகளே, இவ் வருடத்தின் இரண்டு மாதங்கள் கடந்து சென்றுவிட்டது. நாம் எங்கு நிற்கிறோம்? என்று சிந்திக்க வேண்டிய வேளை இது. சாராள் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளையுடைய சீமானின் மனைவி. அன்று வீட்டு வாசலில் நின்ற மனிதர் முன்பாக வந்து தன்னிடம் உள்ள வெள்ளியும் பொன்னினாலுமான ஆபரணங்களால் தன்னை அலங்கரித்து தான் ஆபிரகாம் சீமானின் மனைவி என்று சாராள் தன்னை அறிமுகப்படுத்தியிருக்கலாம். அல்லது இவ்வளவு சீக்கிரமாய் உங்களுக்காக அப்பம் சுட்டவள் என்றும் கூறியிருக்கலாம். ஆனால் கூடார வாசலில் தேவதூதன் நிற்கிறார் சாராள் கூடாரத்திற்கு பின்புறமாய் பெரிதானதொரு குறையுடன் நிற்கிறாள், நின்றவளை தேவன் கண்டார்.

ஆதியாகமம் 21:1 **கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார்.** *"LORD visited Sarah"* என ஆங்கில வேதம் கூறுகிறது. **கர்த்தர் சாராளை சந்திக்கும்படி போகிறார். கர்த்தர் தாம் உரைத்தபடியே** சாராளுக்கு **செய்தருளினார்.** ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில் சாராள் கர்ப்பவதியாகி தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அவள் ஜாதிகளுக்கு தாயானாள். சாராளுக்கு பிள்ளை இல்லை என்ற குறையுடன் மனிதர்களுக்கு பின்புறமாய் நின்றாள். நீயும் கூட ஒரு குறைவுடன் இருக்கலாம். ஆனால் நீ நிற்கும் இடத்தை சிந்தித்துப்பார். **நீ நிற்க வேண்டிய இடம் உன்னை அழைத்த தேவனின் பின்பாகத் தான் நீ நிற்க வேண்டும். அவருடைய பாத அடிகளை பின்பற்றி அவருக்கு முன்பாக அல்ல அவருக்கு பின்பாக நீ செல்ல வேண்டும்.**

ஆபத்து வேளையிலும், சாராளை தேவன் பாதுகாத்தது போல தேவன் உன்னைப் பாதுகாப்பார். யாரும் உன்மேல் கைபோட தேவன் அனுமதிக்க

மாட்டார். எப்போது? அவருக்கு பின்பாக நிற்கும் போது. சாராளுக்கு உரைத்தபடி செய்தார். உனக்கும் நிச்சயமாய் அவர் செய்வார். குறைவுகள் நிறைவாக்கப்படும் எப்போது? தேவன் தான் குறித்த காலத்திலே அதை நிறைவேற்றுவார். உன்னுடைய எல்லா காரியங்களுக்கும் தேவனை உன் முன்பாக வைத்து நீ அவர் பின்புறமாய் நில். பொறுமையுடன் காத்திரு. அப்போது தேவ ஆசீர்வாதம் உன்பக்கம் இருக்கும்.

**நீதிமொழிகள் 3:6 உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.**



# வினா விடை - 86

*01.* எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய் கொண்டு வரப்பட்டவன் யார்?

*02.* மனைவியைக் கண்டடைகிறவனுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன?

*03.* சிறை கைதியாயிருக்கும் போதே சிறைச்சாலை விசாரிப்புக்காரனா யிருந்தவன் யார்?

*04.* கடலில் விளையாடிக் கொண்டிருக்கும் பிராணியின் பெயர் என்ன?

*05.* ஒரு வெள்ளாட்டுக்குட்டி ஒரு கழுதையின் மேல் ஏறியிருந்ததெப்போது?

*06.* ஒரு பெரிய கல்லை என்னிடத்தில் உருட்டிக் கொண்டு வாருங்கள் என்றது யார்?

*07.* ஒரே வேளையில் ஒருமித்து ஒரு கெபியில் ஒளித்துக் கொண்டிருந்த ஐந்து ராஜாக்கள் யார்?

*08.* மோசே கன்மலையை அடித்து தண்ணீர் புறப்படச் செய்த ஸ்தலத்தின் பெயரென்ன?

*09.* சிறைச்சாலையில் இருப்புக் கதவு தானாய் திறவுண்டதெப்போது?

*10.* பரிசுத்தவான்களில் அனேகரைச் சிறைச்சாலையில் அடைத்தவன் யார்?

**சங்கீதம் 111:10 கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்**




J.கிறேசியன்




வாழ்க்கையின் சுவைமிக்க பல அனுபவங்கள் வாழ்க்கையின் பல பாடங்களை நமக்கு கற்றுக் கொடுக்கின்றன. பொதுவாக நாம் அறிந்து கொண்ட விடயம் என்னவென்றால், பல வேளைகளில் மனிதன் மனிதனை ஆச்சரியத்திற்குள்ளாக்கும் பல சந்தர்ப்பங்களை நாம் காணலாம். **மத்தேயு 5:10 நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.**

ஆனால் வேதாகமத்திலே ஒரு மனிதன் ஆண்டவரையே ஆச்சரியத்திற்குட்படுத்தினான் என்பது எவ்வளவு பெரும் செயல் ஆகும்.

**மத்தேயு 8:5-13 (5.) இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து: 6. ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். 7. அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார். 8. நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். 9. நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்றான். 10. இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். 11.**

**அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். 12. ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப் படுவார்கள்; அங்கே அழுகையும் பற் கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்க ளுக்குச் சொல்லுகிறேன் என்றார். 13. பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்த படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக் காரன் சொஸ்தமானான்.**

இப் பகுதியை நாம் பார்க்கும் போது நூற்றுக்கு அதிபதியைக் குறித்த சம்பவத்தை நாம் காணலாம்.

அந் நாட்களில் ரோமர்கள் யூதர் களை ஆண்டுவந்தனர். 100 பேரைக் கொண்ட ஒரு படைக்கு இவன் தான் அதிகாரி. இந்த நூற்றுக்கு அதிபதி மிகவும் கனத்திற்குரியவன். அடுத்து மிகவும் அதிகாரம் கொண்டவன்.

இப்படிப்பட்டவனுடைய செயல் இரண்டு விதங்களில் கிறிஸ்துவை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

## 01. அன்பு – மத்தேயு 8:5-6

தன்னுடைய வேலைக்காரன் வியாதிப்பட்ட போது வேதம் சொல்கிறது: **"அவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்து தன் வேலைக்காரன் சுகமடைய வேண்டும். அவர் வந்து அவனைக் குணமாக்க வேண்டும்"** என்று கேட்டான். காரணம்; அந்த அதிபதி தன் வேலைக்காரனிடம் வைத்த **அன்பு.** இவன் வேலைக்காரன் தானே, அவனே ஏதாவது செய்து பிழைக் கட்டும் என அவன் எண்ணவில்லை. மாறாக இயேசுவிடம் ஓடிவந்தான்.

**1கொரிந்தியர் 13:7 அன்பு சகலத்தையும் தாங்கும், சலகத்தையும் சகிக்கும்.** ஏனென்றால்: **1யோவான் 4:16 தேவன் அன்பாகவே இருக்கிறார்.** இவ் அன்பானது கல்வாரி சிலுவையில் உருவாக்கப்பட்டு அதிலே உருப்பெற்றுள் ளது. அந்த அன்பை வெளிப்படுத்து.


## 02. தாழ்மை


இந்த நூற்றுக்கு அதிபதி இயேசு கிறிஸ்துவிடம் வர வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் **மத்தேயு 8:9 நான் ஒருவனைப் போ என்றால் போகிறான் வா என்றால் வருகிறான் இதை செய் என்றால் செய்கிறான் என்றான்.**

அப்படிப்பட்ட அதிகாரம் உடைய வன் ஒரு வேலைக்காரனை அனுப்பி இயேசுவை அழைத்திருக்கலாம். அல்லது தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரை அழைத்திருக்கலாம். ஆனால் அவன் கூறுகின்றான்: **மத்தேயு 8:8 நான் பாத்திரன் அல்ல.** ஏனென்றால் கிறிஸ்து வின் தூய அதிகாரத்திற்கு, அவருடைய வல்லமைக்கு முன்பாக தான் ஒன்றும் இல்லை என நம்பினான். தேவகுமாரனின் அதிகாரமுள்ள வார்த்தையானது தூரங் களைத் தாண்டி அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றும்.

எனவே எம்முடைய ஜீவிய காலத்தில் வெறுப்பும், பெருமையும் கொள்ளாது பரலோக குணமாகிய அன்பையும், தாழ்மையையும் அணிந்து கொள்வோம். தேவ சித்தம் எம் வாழ்வில் நிறைவேறட்டும்.

# குறுக்கெழுத்துப் போட்டி - 84



## இடமிருந்து வலமாக

01. கர்த்தர் இவனுடைய ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கட்டளையிட்டார்
04. மிஸ்பாவில் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்தவன்
08. இவன் யோராம் ராஜாவுக்கு எலிசாவின் அற்புதமான செய்கைகளை விவரித்துச் சொன்னான்
09. இவனின் ஊர் கப்சேயேல்

## வலமிருந்து இடமாக

03. யோவாசைக் களவாய் எடுத்தவள்
06. "............ தன் ............ ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அனேக சாபங்கள் வரும்
07. இவன் அப்பா அபீயேல், பென்யமீன் கோத்திரத்தான், மகா பராக்கிரமசாலி
11. அம்மோனியரும், மோவாபியரும் இஸ்ரவேலைச் சபிக்கும்படி இவனுடன் கூலி பேசிக்கொண்டார்கள்
13. கர்த்தர் அஸ்தோத் ஜனங்களை இதினால் வாதித்தார்

## மேலிருந்து கீழாக

02. அகோலியாபின் அப்பா (குழம்பியுள்ளது)
03. இவனின் இருதயம் கர்த்தருடைய வழிகளில் உற்சாகம் கொண்டது
05. தன் அறையில் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் துக்கித்துக்கொண்டிருந்தவன்

## கீழிருந்து மேலாக

10. "கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளே" எனக் கூறப்படும் பெண்
11. மரத்திலே தூக்கிப்போடப்பட்ட அகாஸ்வேருவின் பிரதானிகளில் ஒருவர்
12. பாஷா இவ்விடத்தில் நாதாபை வெட்டிப்போட்டான்






## ஜான் ஹண்ட்
## - 1848

### கடவுள் பாதை காட்டுவார்

"ஜான், நீ உலகத்திலேயே மிக மோசமான காட்டுமிராண்டிகள் வாழும் பீஜி தீவுகளுக்கு மிஷனெரி பணி செய்ய போக வேண்டும். அதற்கு நீ ஆயத்தமா?" ஜானின் மிஷனெரி இயக்கத் தலைவர் இக் கேள்வியைக் கேட்டார்.

ஆப்பிரிக்கா செல்ல வேண்டும் என்று எண்ணிய ஜான், அண்டவரின் திட்டத்தை உணர்ந்து பீஜி தீவுகளுக்கு செல்ல தன்னை அர்ப்பணித்தார்.

பசுபிக் மகா சமுத்திரத்தில் ஆஸ்திரேலியா கண்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சிறு சிறு தீவுக்கூட்டங்களே பீஜி.

ஒவ்வொரு தீவையும் குறுநில மன்னன் ஆண்டுவந்ததால் ஒருவருக்கொருவர் சண்டையிடுவதிலும், மக்களை கொன்று குவிப்பதிலுமே நாட்களை கடத்தி வந்தனர். கணவன் இறந்தவுடன் மனைவியும் உயிருடன் புதைக்கப்பட்டாள். இல்லையெனில் கணவனின் தீய ஆவிகள் உலவும் என்பது அவர்களின் மூட நம்பிக்கை.

இப்படிப்பட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்புறப்பட்டார் ஜான் ஹண்ட். ஆனால் கப்பல் லாகம்பா தீவை அடைந்த போது அங்குள்ள மிஷனெரியின் சரீர சுகமற்ற நிலையினால் அவருக்கு உதவியாக இருந்து தன் பணியினைத் தொடர்ந்தார்.

ஆறு வாரத்தில் அம் மக்களின் மொழியினைக் கற்றுக் கொண்ட ஹண்ட், வேத கதைகளை பிஜீ மொழியில் எழுதினார். கூடி வந்த மக்களுக்கு அவைகளைப் போதித்தார். இதனால் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகிற்று. அவருடைய உடல் பெலவீனப்பட்டாலும் பீஜி தீவை விட்டுச் செல்ல அவர் விரும்பவில்லை. ஹண்ட்டின் ஊழியத்தினால் அத்தீவு மக்கள் மூடப்பழக்க வழக்கங்களை விட்டனர். பலர் ஞானஸ்நானம் பெற்றனர்.

36 வயது நிரம்பிய ஜான் ஹண்ட், உடல் பலவீனத்தால் இதே நாள் (ஏப்ரல் 25) 1848ஆம் ஆண்டு தன் உடலை பீஜி தீவு மக்களுக்காக கொடுத்தார். இவர் உடல் இங்கிலாந்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இன்று 90 சதவீதத்தினர் பீஜி தீவில் கிறிஸ்தவர்கள்.

**அன்பரே! கடவுள் காட்டும் பாதையை நோக்கிச் செல்ல ஆயத்தப்படுகிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: சோதனைகளும் வேதனைகளும் வரும்போது தான் இருதயத்தின் பெருமை குணமாகிறது — ஜார்ஜ் ஒயில்பீல்டு**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 25**



# சீகன் பால்கு
# 1682 - 1719

## நீங்கள் தான் சாதிக்கப்பிறந்தவர்கள்

1706ஆம் ஆண்டு ஜூலை 9 சோபியா ஹெட்விக் என்ற கப்பல் இந்தியா வந்தடைந்தது. சூரியனின் கதிரொளிகள் "இந்தியா ஒளிரப்போகிறது" என்று அறிவித்துக் கொண்டிருந்தன.

தரங்கையின் தாரகையாய், திருச்சபையின் தலைமகனாய், லூத்தரன் திருச்சபையின் முதல் குருவாக, இந்தியாவின் தரங்கம்பாடியில் காலடியெடுத்து வைத்தார் சீகன்பால்கு.

ஜெர்மானியம், ஆங்கிலம், கிரேக்கம், லத்தீன், எபிரேயம் போன்ற மொழிகளில் புலமை பெற்ற சீகன்பால்குவுக்கோ தமிழ் தெரியாது.

சிறு குழந்தைகளைப் போல மணலில் எழுதிப் பழகினார். இரண்டு வருடங்களில் சிறந்த பண்டிதரானார். வேத புத்தகம் ஏழை எளிய மக்களுக்கு எட்டாக்கனியாக இருப்பதைக் கண்டு நெஞ்சுருகினார்.

1708ஆம் ஆண்டு பதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் தொடங்கி, 1711ஆம் ஆண்டு அதை அச்சிட்டு மக்களின் கைகளில் தவழச் செய்தார். ஆசிய மொழிகளில் முதன் முதலில் தமிழ் வேதாகமத்தைக் கொண்டு வந்த பெருமை இவரையே சாரும்.

ஆதரிப்பாரற்று அனாதைகளாக அலைந்த குழந்தைகளைக் கண்டு, அவர்களுக்கு பள்ளிகளையும், விடுதிகளையும் கட்டினார்; பாடநூல்களை எழுதினார்; அச்சுக்கூடத்தை நிறுவினார்; உலக ஞானத்தோடு இறை ஞானத்தைப் புகட்ட ஆலயங்களைக் கட்டினார்; சிறந்த போதகராக பணியாற்றினார்.

சாதி, மத, இன பேதமின்றி அனைவரின் வாழ்வையும் முன்னேற்றிய சீகன்பால்கு வாழ்ந்ததோ 37 வருடங்கள் தான். இந்தியாவிற்கு வந்த முதல் புரோட்டஸ்டாண்டு மிஷனெரி என்ற சிறப்பு பெற்ற இவரால் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவே தலைநிமிர்ந்தது.

**அன்பரே! அயராது உழைத்து குறுகிய காலத்தில் மாபெரும் பணிசெய்த சீகன்பால்குவைப் போல் நாம் மாறவேண்டாமா? திருச்சபையும், சமுதாயமும் உங்களை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது அல்லவா? உமது பதில் என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நான் என்னைக் காத்துக் கொள்ளாமல், உண்மையைக் காத்துக் கொள்ளும்வரைக்கும் இதே மன தைரியத்துடன் இருப்பேன் — சீகன்பால்கு**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜ்லை 9**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!



தேவ பக்தி மிகுந்தவன், தேவ சமூகம் நின்றவன், அற்புதம் பல செய்தவன், அரசனையே கலங்கச் செய்தவன், ஒரு பெண்ணைக் கண்டு பயந்து மரிக்க நினைத்தவன், இன்று மேலோக நாட்டில் தேவனோடு பேசிக்கொண்டிருக்கிறான். இவன் யார்?

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனல் 2018 தை - மாசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**ரூத்**

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.






வை. விமலதாஸ்

பிலோமினா அன்ரிக்கு ஒரே ஒரு மகன் அவன் தான் வெஸ்லி. வெஸ்லி பிறந்து ஒரு சில ஆண்டுகளிலேயே பிலோமினா அன்ரியின் கணவர் இறந்து போனார். இதனால் குடும்பத்தின் சகல தேவைகளையும் சந்திக்க வேண்டியதுடன் பிள்ளையையும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பும் பிலோமினா அன்ரியின் தலைமேல் விழுந்தது. மிகுந்த சிரமங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்து வெஸ்லியை பெரியவனாக வளர்த்தெடுத்துவிட்டார். அவனை மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்த்து பெரியவனாக்கியதினாலோ என்னவோ பிலோமினா அன்ரிக்கு மகன் என்றாலே உயிர் தான். அவனை எதற்காகவும் யாருக்காகவும் எப்போதும் விட்டுக்கொடுக்கமாட்டாள். ஆனாலும் அவனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமே என்ற ஏக்கம் பிலோமினா அன்ரிக்குள் எழுந்தது. ஆகவே அவனுக்கு ஏற்ற ஒரு பெண்ணை தேட ஆரம்பித்தார். அவரின் தொடர்முயற்சியால் பிலோமினா அன்ரிக்கு மருமகளாகவும் வெஸ்லிக்கு அன்பு மனைவியாகவும் வந்து வாய்த்தவள் தான் றோஷி. திருமணம் நன்றாகவும் மகிழ்ச்சியாகவும் நடைபெற்று முடிந்தது. மகனும் மருமகளும் மிகவும் அன்பாகவும் சந்தோஷமாகவும் குடும்பம் நடத்த ஆரம்பித்தார்கள். இதனைப் பார்த்த பிலோமினா அன்ரிக்கு எல்லையில்லாத சந்தோஷம்.

ஆனால் இந்த சந்தோஷம் என்னவோ நீடிக்கவில்லை. தன் ஆசை மகன் இப்போது தன்னை கவனிக்காது தன் மனைவியை மட்டும் கவனித்து நேசிக்கிறானே என்ற ஏக்கம் சாதுவாக பிலோமினா அன்ரிக்குள் எழ ஆரம்பித்து. நாட்கள் செல்லச் செல்ல அந்த ஏக்கம் மருமகள் மீது வெறுப்பாக வெளிப்பட ஆரம்பித்தது. ஆகவே இப்போது

எதற்கெடுத்தாலும் மருமகள் மீது பிலோமினா அன்ரி கசந்து கொள்ள ஆரம்பித்தாள். அத்துடன் மகனையும் நச்சரிக்க ஆரம்பித்தார். எவ்வளவு கஷ்டப்பட்டு அப்பா இல்லாமல் உன்னை வளர்த்து ஆளாக்கினேன், ஆனால் நீ இப்போது மனைவியின் பின்னாக செல்கிறாயே என்ற சொல் அவ்வப்போது வெஸ்லியின் காதுகளிலும் விழ ஆரம்பித்தது. மாமியார் செய்யும் காரியங்களை புரியாமல் இருப்பதற்கு ரோஷி ஒன்றும் சின்னப்பிள்ளை இல்லையே. இப்போது அவளும் மாமியார் மேல் கசப்பு கொள்ள ஆரம்பித்தாள். இதனால் வீட்டில் தினமும் மாமியார் – மருமகள் சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருக்கும் போது ரோஷியின் எண்ணங்களுக்குள் மாமியார் இறந்துவிட்டால் தன்னுடைய பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும், மாமியார் தொல்லையும் அகன்றுவிடும் எனும் எண்ண அலைகள் ஓட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இதனை நினைப்பதற்கே பயந்த ரோஷி இப்போது மாமியாரை கொலை செய்வதற்கு என்ன செய்யலாம் என திட்டம் தீட்ட ஆரம்பித்தாள். இதன் விளைவாக அவள் தனக்குத் தெரிந்த உள்ளூர் வைத்தியர் ஒருவரை நாட முடிவு செய்தாள். எனவே அவள் ஒரு நாள் அந்த வைத்தியரிடம் சென்றாள். சென்றவள் தன் மாமியாரின் தொல்லை தாங்க முடியவில்லை, ஆகவே அவரை கொலை செய்வதற்கு ஏதாவது மருந்து இருந்தால் தாருங்கள் என கேட்டாள்.

இவளுடைய கதை முழுவதையும் பொறுமையாகக் கேட்ட வைத்தியருக்கு புரிந்துவிட்டது; இவளுடைய இந்த முடிவுக்கு காரணம் இவர்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் அன்பு இல்லை என்பது. எனவே வைத்தியரும் அவளுடைய யோசனைக்கு மருந்து தருவதாக கூறி ஒரு போத்தல் நிறைய மருந்து ஒன்றினைக் கொடுத்தார். இந்த மருந்து மெல்லக்கொல்லும் விஷம் கொண்டது. எனவே இந்த மருந்தை தேனீர் கொடுக்கும் போது அதற்குள் கலந்து கொடுத்தால் யாருக்கும் தெரியாது. அவ்வாறு அதனைக் குடித்தால் மூன்று மாதங்களின் பின் இயற்கையாகவே இறப்பதைப் போன்று இறந்துவிடுவார்கள். யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் வராது என்று கூறினார். இதனைக் கேட்ட ரோஷிக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. எப்படியோ பிலோமினா மாமிக்கு ஒரு முடிவைக்கட்டிவிடலாம் என எண்ணினாள். அப்போது வைத்தியர் கூறினார்: இந்த மூன்று மாதங்களாவது உன் மாமியோடு அன்பாக நடந்துகொள். அவரை நச்சரிக்காதே, அவரை நன்றாக கவனித்துக்கொள், அவருடைய சொல்லுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடந்துகொள். அப்போது மாமி மரித்தாலும் உன்மேல் யாருக்கும் சந்தேகம் வராது என்று மேலதிக ஆலோசனையும் கூறி அனுப்பிவைத்தார்.

மிகுந்த சந்தோஷத்தோடு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் ரோஷி. வந்த நாளிலே இருந்து அவள் மாமியோடு அன்போடும் கரிசனையோடும் நடக்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு நாளும் காலை – மாலை தவறாமல் அந்த மருந்தை தேனீருக்குள் கலந்து மாமிக்கு கொடுத்தாள். ஒன்றையும் புரிந்து கொள்ளாத மாமியார் என் மருமகள் இப்போதெல்லாம் முன்போல் இல்லையே. என்னோடு நன்றாக பேசுகிறாள், என் மேல் கரிசனையாக இருக்கிறாள், என் சொல்லுக்கு கீழ்ப்படிகிறாள் என்று சிந்திக்க ஆரம்பித்தாள். நான் தான்

மருமகள் மேல் அன்பாக நடந்து கொள்ளாமல் விட்டுவிட்டேன் என்று நினைத்து தன் மருமகளோடு அன்போடு நடந்து கொள்ள ஆரம்பித்தார். இப்போது மகன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் மருமகளைக் குறித்து புகழ்ந்து பேச ஆரம்பித்தாள் ஒன்றுமே தெரியாத பிலோமினா மாமி. ஆனால் ரோஎஷியோ நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள். எப்போது அந்த நாள் வரும்? மாமிக்கு எப்போது முடிவுகட்டலாம் என காத்திருந்தாள். ஒரு மாதம் கடந்தது, இரண்டு மாதம் கடந்து மூன்றாம் மாதத்தை தொடுவதற்காக நாட்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் இப்போது ஏதோ ஒன்று ரோஷியின் மனதையும் குடைய ஆரம்பித்தது. மாமி இப்போது என்னோடும் அன்பாகத் தானே நடந்து கொள்கிறார், என்மேல் கரிசனையாக இருக்கிறார். ஆனால் நான் ஏன் அன்பான மாமியை கொலை செய்வதற்கு துணிந்துவிட்டேனே என எண்ணத்தொடங்கினாள். மறுபக்கம் வைத்தியர் குறித்த காலக்கெடு நெருங்கிக் கொண்டிருந்தது. இப்போது ஏதோ ஒரு முடிவெடுத்தவளாய் உடனடியாக வைத்தியரை சந்திக்கும்படி ஓடிச்சென்றாள். சென்றவள் வைத்தியரைப் பார்த்து எதுவும் பேசாமல் அழ ஆரம்பித்தாள். அப்போது வைத்தியர் கேட்டார், என்ன மூன்று மாதங்களிற்கு முன்பே மாமி இறந்துவிட்டாரா? அப்போது ரோஷி சொன்னாள்: வைத்தியரே நான் தவறாக என் மாமியை கொலை செய்ய காரியங்களை செய்துவிட்டேன், தயவு செய்து என்னை மன்னித்து என் மாமியை காப்பாற்றுங்கள். அவர் மரிப்பதை நான் விரும்பவில்லை ஏதாவது மருந்தைக் கொடுத்து என் மாமியைக் காப்பாற்றுங்கள் என்று கதற ஆரம்பித்தாள்.

அப்போது சிறு புன்னகையுடன் வைத்தியர் கூறினார்: நீ என்னிடம் வரும் போதே உன்னுடைய பிரச்சினையை சரியாக புரிந்து கொண்ட நான் உன்னிடம் கொடுத்த மருந்து விஷ மருந்து அல்ல. மாறாக உடலுக்கு புத்துணர்ச்சியூட்டும் சத்துள்ள மருந்தையே கொடுத்தேன். எனவே பயப்படாதே, மாமி சாகமாட்டார். சந்தோஷத்தோடே சென்று உன் மாமியோடு அன்பாக நடந்து கொள் என்று கூறினார். இதனைக் கேட்ட ரோஷியின் சிந்தனைக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறக்க ஆரம்பித்தது.

ஆம் நண்பர்களே! இன்றைக்கு அனேக பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணம் அன்பு இல்லாமையே என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. அதனால் தான் ஒருவரை ஒருவர் தாக்கி, காயப்படுத்தி நம்மை காப்பாற்றிக் கொள்ள முனைகிறோம். இதனால்தான் அனேக துன்பங்களும் துக்கங்களும் நமக்கு ஏற்படுகிறது. எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடைய நலனைக் காட்டிலும் பிறருடைய நலனை முன்னிறுத்தி செயற்படும் போது எல்லோருடைய வாழ்க்கையிலும் சந்தோஷம் பிறக்கும் என்பதை புரிந்து கொள்வோமா? எவ்வளவு தான் பாலை வார்த்தாலும் நஞ்சையே கக்கத்தெரிந்த பாம்மைப் போல அல்ல; எவ்வளவு தான் உப்பு நீரை பாய்ச்சினாலும் இளநீரை மட்டுமே கொடுக்கும் தென்னை மரத்தைப் போல வாழ ஆரம்பிப்போம். **யோவான் 15:17 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.**

---





# தவறை உணர்ந்தால் மன்னியும்

**வேதப்பகுதி: லூக்கா 15:17–24**

கிறிஸ்டோவின் ஸ்கூல் பேக்கில் புதிய ஒரு பேனா இருப்பதை அலெக்ஸ் பார்த்தான். நைசாக அதனை எடுத்து தன் பைக்குள் வைத்துக் கொண்டான். ஆனால் திருடுவது தவறு என்று உணர்ந்தான். உடனேயே அதனை கிறிஸ்டோவிடம் திருப்பிக் கொடுத்து ஸாரி சொன்னான்.

ஆனால் கிறிஸ்டோ அலெக்ஸ் பேனா திருடினான், பேனா திருடினான் என்று எல்லோரிடமும் சொன்னான். அதனைஅ அறிந்தார் வகுப்பு ஆசிரியர். "அலெக்ஸ் தான் செய்தது தவறு என்று உணர்ந்தான். பேனாவை திருப்பிக் கொடுத்தான். ஸாரி சொன்னான். அதற்குப் பின்னர் கிறிஸ்டோ அவனைப் பற்றி மோசமாக பிறரிடம் சொன்னீது தவறு" என்றார்.




கர்த்தர் தவறு செய்கின்றவர்களை தண்டிப்பார். தவறை உணர்ந்து கொண்டால் மன்னித்து அன்புடன் ஏற்றுக்கொள்வார். ஒருவர் தவறு செய்தாலும், அந்த தவறை உணர்ந்தால் நாம் அவரைக் குறித்து மோசமாக பேசக்கூடாது.

**சிந்தனைக்கு:–** செய்த தவறை உணர்ந்து திருந்தியவரை கர்த்தர் நேசிக்கின்றார். அந்த நபரைக் குறித்து நாம் மோசமாகப் பேசுவது தவறு.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — மார்ச் 16

## குறுக்கெழுத்துப் போட்டி - 83



**இடமிருந்து வலமாக**

02. யேசபேல் - 1இரா 21:2-15

07. எரேமியா (குழம்பியுள்ளது) - எரேமி 18:1-3

09. விவேகி - நீதி 17:27

11. பிலேயாம் (குழம்பியுள்ளது) - எண் 24:17

15. முகதுக்கத்தினாலே - பிரசங்கி 7:3

**வலமிருந்து இடமாக**

01. பேதுரு - 11பேதுரு 2:22

03. எஸ்றா - எஸ்றா 9:6

04. யோனத்தான் - 1சாமு 14:27

10. கிதியோன் - நியா 6:11

12. யாக்கோபு - ஆதி 31:40

**மேலிருந்து கீழாக**

04. யோனா - யோனா 4:9

05. தானியேல் - தானி 4:8

06. எசேக்கியா - 11நாளா 32:30

08. எசேக்கியா - ஏசா 38:12

**கீழிருந்து மேலாக**

13. அப்சலோம் - 11சாமு 16:17

14. மாயக்காரரின் - யோபு 20:4

*சரியான பதில்கள்*

# சரியான விடை எழுதியவர்கள்

## குறுக்கெழுத்துப் போட்டி - 83, வினா விடை - 85

**மானிப்பாய்**

01. எம்.ஜெயந்தி
02. எஸ்.சிந்துஜா

**நாவற்குழி**

03. சூ.ஜான்சி *

**பாண்டவெட்டை**

04. ம.சிவகௌரி *
05. ம.நிம்சிகா *

**காரைநகர்**

06. ம.மதுஷன் *
07. பா.செமிரா *
08. பா.மோகன் *
09. ம.டயானி *
10. லோ.வதனி *
11. பா.ஷலோமி *
12. பா.அனுகரன் *
13. வி.அனுராதா *
14. பா.அனுஷியா *
15. நா.கிறிஸ்தீனா *
16. நா.அன்னாள் *
17. நா.கிறிஸ்ரீன் *

• குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

அன்பின் அனல் வாசகர்களே!

அனேகர் குறுக்கெழுத்து மற்றும் வினாவிடை போட்டிகளில் பங்குபெற்றும் சிறு தவறுகளினால் பெயர்கள் பிரசுரிக்கப்பட முடியவில்லை. அடுத்த போட்டியில் மிகச் சரியான விடைகளை மட்டும் எழுதி அனுப்பி பெயர்பட்டியலுக்குள் சேர்ந்து கொள்ளுங்கள்.

- ஆசிரியர் -

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)
## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 220.00 |
| இந்தியா (India) | 390.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 840.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 420.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 720.00 |

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................................................................

முகவரி:........................................................................................

......................................................................................................

......................................................................................................

ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 5:00 மணிக்கு

# சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணத்தில்

அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்

வியாதிப்பட்டவர்கள்

தேவையுள்ளவர்கள்

பிசாசின் பிடியில் உள்ளவர்கள்

போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

TO:
MRS. Y.POOMANY,
ZION CHURCH,
JAFFNA.

*Zion Church Office,*
*No. 347, Navalar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351